

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக்கூட்டரங்கில் சட்டம் ஒழுங்கு மற்றும் போதை பொருள் தடுப்பு தொடர்பான ஆய்வுக்கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் நடைபெற்றுது. இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாநகர காவல் ஆணையர் பிரவீன் குமார் அபினபு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், திருப்பூர் சார் ஆட்சியர் சௌம்யா ஆனந்த், மாநகர துணை காவல் ஆணையர்கள் கிரிஸ் அசோக் யாதவ், ராஜராஜன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, உதவி ஆணையர் (கலால்) ராம்குமார் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய தி.மு.க.சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.நல்லதம்பி தலைமையில் கிருஷ்ணாபுரம் கலைஞர் திடலில் நடைபெற்றது. இதில் கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன் கலந்து கொண்டு, 10,12 ஆம் வகுப்புகளில் முதல் மூன்று இடம் பெற்ற 53 மாணவ,மாணவியர்க்கு 1 லட்சத்து 6 ஆயிரம் ரொக்கம் மற்றும் பதக்கம்,கேடயங்களை வழங்கி சிறப்புரையாற்றினார்கள். இந்த கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பங்கற்றேனர்.

### நீலகிரி மாவட்டம் - பந்தலூர் வட்டம் - பொன்னானி ஆற்றில் மூழ்கி

# உயிரிழந்த சிறுவனின் உடலுக்கு நேரில் அஞ்சலி!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் - ஆ.இராசா எம்.பி. ஆறுதல் தெரிவித்து நிதியுதவி

*நீலகிரி, ஜூலை 23-*

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், நெலாக் கோட்டை ஊராட்சி, பிதர் காடு பகுதியைச் சேர்ந்த சிறுவன் குணசேகரன், பொன்னானி ஆற்றில் மீன் பிடிக்க சென்றபோது எதிர்பாராதவிதமாக ஆற்றில் மூழ்கி உயிரிழந்ததை தொடர்ந்து, சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் 21.07.2024 அன்று நேரில் சேன்று அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 இலட்சத்திற்கான காசோலையும், தனது சொந்த நிதியிலிருந்து ரூ.1 இலட்சம் ரொக்கமும் வழங்கினார்கள்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலை வகித்தார்.

பின்னர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம், நெலாக் கோட்டை ஊராட்சி, பிதர் காடு பகுதியைச் சேர்ந்த செல்வன்.குணசேகரன், பொன்னானி ஆற்றில் மீன் பிடிக்க சென்றபோது எதிர்பாராதவிதமாக ஆற்றில் மூழ்கி உயிரிழந்ததை தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுடன் உயிரிழந்த குணசேகரனின் உடலிற்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிக்கப்பட்டது.

மேலும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.3 இலட்சத்திற்கான காசோலையும், எனது சொந்த நிதியிலிருந்து ரூ.1 இலட்சம் ரொக்கமும் வழங்கப்பட்டது. காணாமல் போன மற்றொரு சிறுவனின் குடும்பத்தினரையும் நேரில் சந்தித்து, ஆறுதல் தெரிவித்து, எனது சொந்த நிதியிலிருந்து ரூ.1 இலட்சம் ரொக்கம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மேல் கூடலூர், கோக்கோல் ஒன்றரை சென்ட் குடியிருப்பு பகுதியில் மழை காரணமாக ஏற்பட்டுள்ள விரிசல் பார்வையிடப்பட்டது. அப்பகுதி புவியியல்துறை அலுவலர்கள் மூலம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. மழையின் காரணமாகவும், பாதுகாப்பு நலன் கருதியும் சேரம்பாடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியிலும், கூடலூர் தொரப்பள்ளியிலும் தங்கியுள்ள 26 குடும்பங்களை நேரில் சந்தித்து, அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து, நிவாரண பொருட்களையும், எனது சொந்த நிதியிலிருந்து தலா ரூ.5,000/- நிவாரண தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, நீலகிரி மாவட்ட நிர்வாகம் தென்மேற்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையினை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது என நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சௌந்தரராஜன், கூடலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், தேவாலா துணை காவல் கண்காணிப்பாளர் வசந்தகுமார், முன்னாள் அரசு கொறடா முபாரக், நகராட்சித்தலைவர்கள் திருமதி.பரிமளா (கூடலூர்), திருமதி. சிவகாமி (நெல்லியாளம்), வசீம்ராஜா (குன்னூர் (பொ)), சேரங்கோடு ஊராட்சித்தலைவர் திருமதி.லில்லி இலியாஸ், கூடலூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயசங்கர், ஆறுமுகம், கூடலூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திராவிடமணி, திட்டக்குழு உறுப்பினர்கள் ஜார்ஜ், ராஜேந்திரன், பந்தலூர் வட்டாட்சியர் கிருஷ்ணமூர்த்தி உட்பட பலர் உடனிருந்தனர்.

### இளைஞர்களை கட்சிக்கும் நாட்டுக்கும் பயன்படுத்திட

# ஆக்கபூர்வமாக பணியாற்றி வருகிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் பாராட்டு!

*சென்னை, ஜூலை 23-*

தமிழ்நாடு விவசாயிகள், தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை வருமாறு:

திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி தொடங்கப்பட்டு 44 ஆண்டுகளை நிறைவு செய்து 45 வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியில் தற்போதைய திராவிட முன்னேற்ற கழக இளைஞரணியின் செயலாளராக இருந்து, சிறப்பாக பணியாற்றி வரும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் சார்பில் உள்ளார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



1980 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணிக்கு பொறுப்பாளராக இன்றைய முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று இளைஞர்களை பெரிய அளவில் இணைத்து, அந்த அணியை பலப்படுத்தி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்தவர். ஒவ்வொரு தேர்தலின் வெற்றிக்கும் எந்த எதிர்பார்ப்பையும் நோக்காமல், வெற்றி ஒன்றையே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி ஒன்றையே, அந்த கட்சியின் தலைமை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பணியாற்ற கூடியவர்கள் இளைஞர் அணியை சேர்ந்தவர்கள்.

அப்படி உழைத்ததன் மூலம் அந்த இளைஞர் அணியை சேர்ந்த பலர் இன்றைக்கு மிகப்பெரிய பொறுப்புக்கு வந்துள்ளது என்பது உழைப்பிற்குக் கிடைத்த ஊதியமாகும். அப்படிப்பட்ட இளைஞர் அணியினுடைய செயலாளராக 2019 ஆம் ஆண்டு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டார். அவர் பொறுப்பேற்றுக் கொண்ட பின் இளைஞரணியை அடுத்த நிலைக்கு கொண்டு செல்வது, அமைப்பு ரீதியாகவும் வளர்ந்து வரும் தொழில் நுட்ப ரீதியாகவும் பணியாற்றி, இந்த இளைஞரணியை வளர்த்தெடுத்து வருகிறார்கள் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

தமிழ்நாட்டு மக்களை குறிப்பாக இளைஞர்களை பாதிக்கக்கூடிய நீட் தேர்வை, குடியுரிமை சட்டம் போன்ற மக்கள் விரோத சட்டங்களை எதிர்ப்பதில் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் உள்ள இளைஞரணியினர் துடிப்போடு போராட்டம் நடத்துவதை இந்த நாடு அறியும். இளைஞர்கள் என்பவர்கள் ஒரு கட்சிக்கு எப்படி முக்கியத்துவமோ, அதைப்போல ஒரு நாட்டுக்கும் மிக மிக முக்கியமானதாகும். இளைஞர்கள் அதிகம் கொண்ட நாடு, அந்த இளைஞர்களின் சக்தியை முறையாக பயன்படுத்தக்கூடிய நாடு, உலகில் வல்லரசாக கூடிய வாய்ப்புகள் உண்டு. அந்த அடிப்படையில் இளைஞர்களை கட்சிக்கு மட்டும் பயன்படுத்தாமல் அடுத்த தலைமுறைக்கு அவர்களை கொண்டு செல்வதற்காக அவர்களுக்கு திராவிட மாடல் பயிற்சி பாசறை கூட்டம் நடத்துவது, அவருடைய படிப்பு திறனை வளர்த்து பொது அறிவை மேம்படுத்த சட்டமன்ற தொகுதி தோரும் கலைஞர் நூலகம் அமைப்பது, அதுபோல முரசொலி பாசறை பக்கம் போன்ற ஏராளமான பணிகளை முன்னெடுத்து வருகிறார்.

அவருடைய இப்படிப்பட்ட முற்போக்கு பணிகள் மூலம் திராவிட முன்னேற்ற கழகம் வளர்ச்சி அடைந்து, அதன் மூலம் இளைஞர் சக்தி இந்த நாட்டின் வளர்ச்சிக்கும் பயன்படும் வகையில் பணியாற்றக்கூடிய உதயநிதி ஸ்டாலின் அவர்களுடைய பணி தொடர்ந்திட, அவர் மென்மேலும் கட்சியிலும், ஆட்சியிலும் உயரத்தைத் தொட்டிட விவசாயி கள் தொழிலாளர்கள் கட்சி உள்ளார்ந்த வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறது.

இவ்வாறு பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### எஸ்.நல்லதம்பி தலைமை! பெரம்பலூர் மாவட்டம் - வேப்பந்தட்டை மேற்கு ஒன்றியத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம்!

## ச.அ.பெருநற்கிள்ளி-எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ.சிறப்புரை!

*பெரம்பலூர், ஜூலை 23-*

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா பொதுக்கூட்டம் கிருஷ்ணாபுரம் கலைஞர் திடலில், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.நல்லதம்பி தலைமையில், ஒன்றிய அவைத்தலைவர் டி. அம்பேத்கர் வரவேற்புரையில், வேப்பந்தட்டை ஒன்றிய பெருந்தலைவர் க.ராமலிங்கம், துணை பெருந்தலைவர் எம்.ரெங்கராஜ், ஒன்றிய துணை செயலாளர்கள் மருதாம்பாள் செல்வக்குமார், கே.கிருஷ்ணமூர்த்தி,

டி.தங்கமணி, ஒன்றிய பிரதிநிதிகள் வி.முருகேசன், எஸ்.ராமகிருஷ்ணன், டி. முருகேசன், கிளைச் செயலாளர்கள் ஆர்.சின்னதம்பி, என்.ஜெயராமன், கே.சக்திவேல், ஜெ.பன்னீர்செல்வம், எம்.சரவணன், எஸ்.மணிகண்டன், ஊராட்சி கழக முன்னாள் செயலாளர் சுருதி சீத்தாராமன் ஆகியோர் முன்னிலையில்நடைபெற்றது.

இந்த பொதுக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி கலந்து கொண்டு, 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் முதல் மதிப்பெண் பெற்றவர்களுக்கு ரூ.3ஆயிரம், இரண்டாவது மதிப்பெண் பெற்றவர்களுக்கு ரூ.2 ஆயிரம், மூன்றாவது மதிப்பெண் பெற்றவர்களுக்கு ரூ.ஆயிரம் என மொத்தம் 53 மாணவ, மாணவியர்க்கு 1 லட்சத்து 6 ஆயிரம் ரொக்கம், ரூ.30 ஆயிரம் மதிப்புள்ள பதக்கம் மற்றும் கேடயம் ஆகியவற்றை வழங்கி, சிறப்புரை யாற்றினார்.

இந்த கூட்டத்தில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர் ந.ஜெகதீஷ்வரன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், ஒன்றிய செயலாளர்கள் எம்.ராஜ்குமார், தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன்,

அரும்பாவூர் பேரூர் கழக செயலாளர் ஆர்.ரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூர் கழக செயலாளர் செல்வலெட்சுமி சேகர், அரும்பாவூர் பேரூராட்சி தலைவர் வள்ளியம்மை ரவிச்சந்திரன், பூலாம்பாடி பேரூராட்சி தலைவர் பாக்கியலட்சுமி செங்குட்டுவன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்து. ஆதவன் (எ) ஹரிபாஸ்கர்,

மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், அ.அப்துல்கரீம்,மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் இள.கிருஷ்ணா, மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் க.ரமேஷ், மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம்,

மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பாலை.மணிவண்ணன்,

மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர் க.சிலம்பரசன், மாவட்ட பிரதிநிதி எஸ். அழகுவேல், வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் ரா.சிவா, மற்றும் வழக்கறிஞர் பிரபாகரன், பூலாம்பாடி வினோத் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் வி.ராமகிருஷ்ணன் நன்றியுரையாற்றினார்.

### தஞ்சை டெல்டா ரெயில் பாதையை

# இருவழிப்பாதையாக மாற்ற நிதி ஒதுக்கிடுவீர்!

## மாநிலங்களவையில் மு. சண்முகம் வலியுறுத்தல்!

*புதுடெல்லி, ஜூலை 24-*

“தஞ்சை டெல்டா ரெயில் பாதையை இருவழிப்பாதையாக மாற்ற நிதி ஒதுக்க வேண்டும்” என்று நாடாளு மன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினர் மு. சண்முகம் வேண்டுகோள் விடுத்தார். இது குறித்து நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினரும் தொ.மு.ச. பேரவைப் பொதுச்செய லாளருமான மு.சண்முகம் அவர்கள் சிறப்பு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்து பேசியதாவது:-



தஞ்சாவூர் டெல்டா பகுதிகளில் இருக்கக் கூடிய பொதுமக்கள் தஞ்சாவூர் ரயில்வே பாதையை இருவழிப் பாதையாக மாற்ற வேண்டுமென கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

விழுப்புரம் - தஞ்சாவூர் மெயின் லைனில், கும்பகோணம் மயிலாடுதுறை வழியாக இரு வழிப்பாதை அமைக்கப்பட வேண்டும். இந்த பாதை சிதம்பரம், வைத்தீஸ்வரன் கோயில், மயிலாடுதுறை, கும்பகோணம் போன்ற புண்ணிய திருத்தலங்களை உள்ளடக்கிய பாதையாகும். இதனால் சுற்றுலா பயணிகள் அதிகமாக வரக்கூடிய இடங்களை இந்த ரயில்வே பாதை கடந்து செல்கிறது. இந்த மெயின் லைன் என்பது மிகப் பழமையான ஒரு பாதையாகும்.

பயணிகள் மற்றும் சரக்குகள் போக்குவரத்து நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டிருக்கக் கூடிய ஒரு வழித் தடமாகும் இது. இந்தத் திட்டம் வெகு நாட்களாக கிடப்பிலே போடப்பட்டுள்ளது. இதற்குரிய சர்வே முழுமையாக செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழியை இரு வழிப் பாதை யாக்கி னால் பயணிகளின் எண்ணிக்கை கூடும். அவர்களுக்கான பயண நேரம் குறையவும் வாய்ப்பு உண்டாகும். ரயில்வேத் துறை அமைச்சர் அவர்களை யும், நிதித்துறை அமைச்சர் அவர்களையும் இந்த நிதிநிலை அறிக்கையில் அதற்குரிய நிதியினை ஒதுக்கீடு செய்து இந்த பாதையை விரைவில் மக்களின் பயன்பாட்டிற்கு வருவதற்கு ஆவன செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மு. சண்முகம் பேசினார்.

### தி.மு.க. மீனவர்அணி

# நாகை மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

## தி.மு.க.மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின் அறிவிப்பு!

நாகை மாவட்ட மீனவர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட எஸ்.கே.ஜி.ஏ.சேகர் அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **எஸ்.பாலமுரளி** (3/188, மாரியம்மன் கோவில் தெரு, அக்கரைப்பேட்டை, வடக்கு பொய்கைநல்லூர் அஞ்சல், நாகப்பட்டினம் - 611 106.) அவர்கள் நாகை மாவட்ட மீனவர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்டமாவட்ட மீனவர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”** சென்னை - 18 நாள்- 22.07.2024

**டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்** செயலாளர் தி.மு.க. மீனவர் அணி.

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

## விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் அறிக்கை!

*விழுப்புரம், ஜூலை 23-*

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவரும்,சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளி நாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான் தலைமையில் 27.7.2024 சனிக்கிழமை காலை 11.00மணி அளவில் திண்டிவனம் J.V.S திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள், பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணைஅமைப்பாளர்கள், மற்றும்உள்ளாட்சி பிரதிநிதிகள் ,அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்:** 1.நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களை வெற்றி பெற செய்வதற்கு உறுதுணையாக உழைத்த செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய தொகுதிகளில் உள்ள கழகத்தினர்கள்மற்றும் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிப்பது சம்பந்தமாக,2.சமீபத்தில் விக்ர வாண்டி சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகளுக்கு ஒதுக்கப்பட்ட ஊராட்சிகளில்கழகத்தினர்கள் இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் சிறப்பாக பணியாற்றி கழக வேட்பாளர் வெற்றிபெறுவதற்கு உழைத்த அனைவருக்கும் நன்றி தெரிவிப்பது சம்பந்தமாக.3.விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களில் செயல் வீரர்கள் கூட்டமும்,செஞ்சி அனந்தபுரம் மரக்காணம்பேரூர் கழகங்களில் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடத்துவது சம்பந்தமாக. 4.திண்டிவனம் நகரத்தில் செயல் வீரர்கள் கூட்டம் நடத்துவது சம்பந்தமாக. 5.மக்களுடன் முதல்வர் திட்டத்தை மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தல் சம்பந்தமாக. 6. செஞ்சி,மயிலம், திண்டிவனம், தொகுதி வாரியாக வாக்கு சாவடி முகவர்கள் கூட்டம் நடத்துவது சம்பந்தமாக. 7. அனைத்து சார்பு அணிகள், இளைஞரணி போன்ற அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கூட்டம் நடத்துவது சம்பந்தமாக.8.புதியதாக கழகத்தில் உறுப்பினர்களாகசேர்ந்துள்ளவர்களுக்கு அவர்களின் இல்லம் தேடி உறுப்பினர் உரிமை சீட்டு வழங்குதல் சம்பந்தமாக.9.கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ப.சேகர் தெரிவித்துள்ளார்.



சேலம் மாநகர தி.மு.க. இளைஞரணி அவசரக் கூட்டம் கலைஞர் மாளிகையில் மாநகர செயலாளர். பா .ரகுபதி தலைமையில் நடைபெற்றது. மாநகர அமைப்பாளர் கேபிள் எஸ். சரவணன் முன்னிலை வகித்தார் இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில் மாநகர துணை அமைப்பாளர்கள். சிலம்பம் கோபி, எம். வெங்கடேசன் சிவராஜ் சுகைல் ரஹ்மான். பகுதி செயலாளர்கள். தமிழரசன்.சி. பன்னீர்செல்வம். ஜெயக்குமார், சி. பிரகாஷ், கேபிள் ராஜா, கே.டி.ஆர்.தனசேகரன்.ஜெகதீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.